**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.**
**முன்னிலை :—திருமதி.வே.உதயசூரியா, எம்,எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், நத்தம்.**
**2023 ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 23 ம் நாள் புதன்கிழமை**
**அசல் வழக்கு எண்.45/2017**
**CNR TNDG No.100004132017**

ம.பிச்சை .... வாதி

... எதிர் ...

1.வெள்ளையன்
2.அம்சு
3.மாரிமுத்து
4.பிரேமாதேவி
5.சத்தியமூர்த்தி
6.சரவணன்
7.அன்புச்செல்வி
8.சார்பதிவாளர், நத்தம் .... பிரதிவாதிகள்

இந்த உரிமையியல் வழக்கானது 28.04.2017 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு 23.08.2023 அன்று இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.ஜஹாங்கீர், B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.S.ராமசுப்பிரமணியன், B.Com.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், 8 ம் பிரதிவாதி தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.P.கிருஷ்ணமூர்த்தி, B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், வழக்குரை மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்து இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது, வழக்குச் சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கோரியும், அதன் தொடர்ச்சியாய் வழக்குச் சொத்தை அமைதியான முறையில் வாதி அனுபவித்து வருவதை 1 முதல் 7 பிரதிவாதிகளோ அல்லது

அவர்களது வாரிசுகளோ, எவ்விதத்திலும் இடைஞ்சல் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், வழக்கு 1 வது அயிட்டச் சொத்தைப் பொறுத்து 1 முதல் 5 பிரதிவாதிகளால் 6 ம் பிரதிவாதிக்கு 10.,03.2017 ம் தேதி நத்தம் சார்பதிவகத்தில் எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரம் (ஆவண எண்.389/2017) செல்லா மற்றும் இல்லா நிலையது (Null and Void) என விளம்புகை பரிகாரம் கோரியும், தாவா 2 முதல் 7 அயிட்டச் சொத்துக்களை பொறுத்து 1 முதல் 5 பிரதிவாதிகளால் 7 ம் பிரதிவாதிக்கு 10,03,2017 ம் தேதி நத்தம் சார்பதிவகத்தில் எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரம் (ஆவண எண்,390/ 2017) செல்லா மற்றும் இல்லா நிலையது (Null and Void) என விளம்புகை பரிகாரம் கோரியும், மேற்படி மோசடி கிரைய ஆவணங்களின் மூலம் கிரையம் பெற்ற வழக்குச் சொத்தைப் பொறுத்து 6, 7 பிரதிவாதிகள் எவ்வித பந்தக பாரதீனம் செய்யக்கூடாது என மேற்படியார்களுக்கு எதிராக ஓர் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும், வழக்கின் செலவுத்தொகை கோரியும், இதர பரிகாரங்கள் கோரியும் வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கானது, கடந்த 02.08.2023 தேதியிலிருந்து PW1–ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக வாய்தா வந்தபோது PW1 ஆஜரில்லை. வாதி தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லை. கடந்த மூன்று வாய்தாகளுக்கு தொடர்ச்சியாக PW1 ஆஜரில்லை. பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜரானார். எனவே, PW1–ன் வருகையின்மை காரணமாக இவ்வழக்கு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

2023 ம் ஆண்டு ஆகஸ்டு 23 ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

V UDAYASURIYA

Digitally signed by V UDAYASURIYA
Date: 2023.08.23 01:07:31 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**நத்தம்.**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.**

**முன்னிலை :–திருமதி.வே.உதயசூரியா, எம்,எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், நத்தம்.**

**2023 ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 23 ம் நாள் புதன்கிழமை**
**அசல் வழக்கு எண்.45/2017**

**CNR TNDG No.10000413 2017**

ம.பிச்சை, த/பெ.லேட். மன்னனம்பலம், இந்து, வயது சுமார் 77, சேர்வீடு, வேலம்பட்டி கிராமம், நத்தம் வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

.... வாதி

... எதிர் ...

1. வெள்ளையன், த/பெ.லேட்.சின்னமன்னன், இந்து, வயது சுமார் 62, சேர்வீடு, வேலம்பட்டி கிராமம், நத்தம் வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.
2. அம்சு, த/பெ.வெள்ளையன், க/பெ. மாயப்பெருமாள், இந்து, வயது சுமார் 24, க.எண்.3/36/1, கோம்பைபட்டி கிராமம், K.அய்யாபட்டி அஞ்சல், திண்டுக்கல் வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.
3. மாரிமுத்து, த/பெ.வெள்ளையன், க/பெ.பூமிநாதன், இந்து, வயது சுமார் 22, இராவுத்தம்பட்டி, முளையூர் கிராமம், நத்தம் வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.
4. பிரேமாதேவி, த/பெ.வெள்ளையன், இந்து, வயது சுமார் 21, சேர்வீடு, வேலம்பட்டி கிராமம், நத்தம் வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.
5. சத்தியமூர்த்தி, த/பெ.வெள்ளையன், இந்து, வயது சுமார் 19, சேர்வீடு, வேலம்பட்டி கிராமம், நத்தம் வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.
6. சரவணன், த/பெ.லேட்.பழனியப்பன், இந்து, வயது சுமார் 35, உலுப்பகுடி, புன்னப்பட்டி கிராமம், நத்தம் வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.
7. அன்புச்செல்வி, க/பெ.P.R.சாமிநாதன், இந்து, வயது சுமார் 34, க.எண்.3/379, மேட்டுபாளையம் மெயின்ரோடு, வடமதுரை, குருடாம்பாளையம், கோயமுத்தூர் மாவட்டம், தற்சமயம் க,எண்.24D, நத்தம் பண்ணை, ராஜாவயல், புதுக்கோட்டை வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்.
8. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், கொட்டாம்பட்டி மெயின் ரோடு, நத்தம் டவுன், நத்தம் வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

.... பிரதிவாதிகள்

இந்த உரிமையியல் வழக்கானது 28.04.2017ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு 23.08.2023 அன்று இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.ஜஹாங்கீர், B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.S.ராமசுப்பிரமணியன், B.Com.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், 8ம் பிரதிவாதி தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.P.கிருஷ்ணமூர்த்தி, B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், வழக்குரை மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்து இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கலான நாள் | .. | 28.04.2017 |
| வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | .. | 28.04.2017 |
| வழக்கு மூலம் எழுந்த நாள் | .. | 1946, 10.03.2017, 05.04.2017, 12.04.2017, 16.04.2017 நத்தம் வட்டத்தில் உற்பத்தி. |
| நீதிமன்ற கட்டண விபரம் | .. | <u>பரிகாரம் - அ</u><br>வாதி கோரும் விளம்புகை பரிகார மதிப்பு ரூ.5000/– அதற்கு த.நா.நீ.ம.கட்டணம் சட்டப்பிரிவு 25(b)–ன்படி ரூ.377.50/– நீதிமன்றக் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது.<br><u>பரிகாரம் -ஆ</u><br>வாதி கோரும் விளம்புகை(Null Void) (ஆவண எண்.389/2017) பரிகார மதிப்பு ரூ.5000/– அதற்கு த.நா.நீ.ம.கட்டணம் சட்டப்பிரிவு 25(d)–ன்படி ரூ.377.50/– நீதிமன்றக் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது.<br><br><u>பரிகாரம் -இ</u><br>வாதி கோரும் விளம்புகை(Null Void) (ஆவண எண்.390/2017) பரிகார மதிப்பு ரூ.5000/– அதற்கு த.நா.நீ.ம.கட்டணம் சட்டப்பிரிவு 25(d)–ன்படி ரூ.377.50/– நீதிமன்றக் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | | <u>**பரிகாரம் -ஈ**</u><br>வாதி கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகார மதிப்பு ரூ.1000/– அதற்கு த.நா.நீ.ம.கட்டணம் சட்டப்பிரிவு 27(c)–ன்படி ரூ.75.50/– நீதிமன்றக் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது.<br><br>மொத்த பரிகார மதிப்பு<br>ரூ. 5000+5000+5000+1000= 16000/–<br>மொத்த நீதிமன்ற கட்டணம்<br>ரூ.377.50+377.50+377.50+ 75.50= ரூ.1208/– |

இவ்வழக்கானது, வழக்குச் சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கோரியும், அதன் தொடர்ச்சியாய் வழக்குச் சொத்தை அமைதியான முறையில் வாதி அனுபவித்து வருவதை 1 முதல் 7 பிரதிவாதிகளோ அல்லது அவர்களது வாரிசுகளோ, எவ்விதத்திலும் இடைஞ்சல் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும், வழக்கு 1வது அயிட்டச் சொத்தைப் பொறுத்து 1 முதல் 5 பிரதிவாதிகளால் 6ம் பிரதிவாதிக்கு 10.,03.2017ம் தேதி நத்தம் சார்பதிவகத்தில் எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரம் (ஆவண எண்.389/2017) செல்லா மற்றும் இல்லா நிலையது (Null and Void) என விளம்புகை பரிகாரம் கோரியும், தாவா 2 முதல் 7 அயிட்டச் சொத்துக்களை பொறுத்து 1 முதல் 5 பிரதிவாதிகளால் 7ம் பிரதிவாதிக்கு 10,03,2017ம் தேதி நத்தம் சார்பதிவகத்தில் எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரம் (ஆவண எண்,390/ 2017) செல்லா மற்றும் இல்லா நிலையது (Null and Void) என விளம்புகை பரிகாரம் கோரியும், மேற்படி மோசடி கிரைய ஆவணங்களின் மூலம் கிரையம் பெற்ற வழக்குச் சொத்தைப் பொறுத்து 6, 7 பிரதிவாதிகள் எவ்வித பந்தக பாரதீனம் செய்யக்கூடாது என மேற்படியார்களுக்கு எதிராக ஓர் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும், வழக்கின் செலவுத்தொகை கோரியும், இதர பரிகாரங்கள் கோரியும் வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>தீர்ப்பாணை</u>**

1. இவ்வழக்கானது, கடந்த 02.08.2023 தேதியிலிருந்து PW1–ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக வாய்தா வந்தபோது PW1 ஆஜரில்லை. வாதி தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லை. கடந்த மூன்று வாய்தாகளுக்கு தொடர்ச்சியாக PW1 ஆஜரில்லை. பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜரானார். எனவே, PW1–ன் வருகையின்மை காரணமாக இவ்வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

2. செலவுத்தொகை இல்லை.

V UDAYASURIYA
Digitally signed by V UDAYASURIYA
Date: 2023.08.23 01:07:46 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**நத்தம்.**

**<u>சொத்து விபரம்</u>**

**1)** திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டம், நத்தம் சப்டி, அயன் புன்னப்பட்டி கிராமப் புறவில் கூட்டுப்பட்டா எண்: 339 ல் கட்டுப்பட்ட ரீசர்வே 77/2A நிர் புஞ்சை H.A.0.58.5 க்கு கட்டுப்பட்ட ஏ.1, செ.44–1/2 ல் பொதுவில் சரிபாதி புஞ்சை செ.72–1/4 மட்டும். நான்குமால்

வடக்கு .. ரிசர்வ் பாரஸ்ட்

தெற்கு .. கருப்பாயி வகையறா புஞ்சை

கிழக்கு .. வெள்ளையன் புஞ்சை )எங்களின் 1 வது நபர்)

மேற்கு .. புஷ்பம் புஞ்சை

இதற்குள்பட்டது.

1 முதல் 5 பிரதிவாதிகளால் 1 வது அயிட்டச் சொத்தை 6 ம் பிரதிவாதிக்கு 10.03.2017 ம் தேதியில் எழுதிக்கொடுக்கப்பட்ட கிரைய ஆவண எண். 389/2017( Null and Void ) என்று விளம்புகை செய்ய வேண்டியது.

2) திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டம், நத்தம் சப்டி, அயன் புன்னப்பட்டி கிராமப் புறவில் பட்டா எண்: 1611 ல் கட்டுப்பட்ட ரீசர்வே 76/3A நிர் புஞ்சை H.A.0.34.5 க்கு செண்ட் 85 க்கு நான்குமால் அளவு விபரம்

வடக்கு .. பிச்சை மற்றும் வெள்ளையனம்பலம் புஞ்சை
தெற்கு .. பிச்சையனம்பலம் புஞ்சை
கிழக்கு .. ஓடை
மேற்கு .. கருப்பாயி வகை புஞ்சை

இதற்குள்பட்டது. இதுவும்,

3) திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டம், நத்தம் சப்டி, அயன் புன்னப்பட்டி கிராமப் புறவில் பட்டா எண்: 1611 ல் கட்டுப்பட்ட ரீசர்வே 77/2C நிர் புஞ்சை H.A.0.19.5 க்கு செண்ட் 48 க்கு நான்குமால் அளவு விபரம்

வடக்கு .. ரிசர்வே பாரஸ்ட்
தெற்கு .. கருப்பாயி வகை புஞ்சை
கிழக்கு .. பிச்சை மற்றும் வெள்ளையனம்பலம் புஞ்சை
மேற்கு .. பிச்சையனம்பலம் புஞ்சை

இதற்குள்பட்டது. இதுவும்,

4) திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டம், நத்தம் சப்டி, அயன் புன்னப்பட்டி கிராமப் புறவில் பட்டா எண்: 1611 ல் கட்டுப்பட்ட ரீசர்வே 73/3C நிர் புஞ்சை H.A.0.11.5 க்கு செண்ட் 28 க்கு நான்குமால் அளவு விபரம்

வடக்கு .. பிச்சையனம்பலம் புஞ்சை
தெற்கு .. அழகனம்பலம் புஞ்சை
கிழக்கு .. பிச்சையனம்பலம் புஞ்சை
மேற்கு .. ஓடை

இதற்குள்பட்டது. இதுவும்,

5) திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டம், நத்தம் சப்டி, அயன் புன்னப்பட்டி கிராமப் புறவில் பட்டா எண்: 1611 ல் கட்டுப்பட்ட ரீசர்வே 77/2E நிர் புஞ்சை H.A.0.36.5 க்கு செண்ட் 90 க்கு நான்குமால் அளவு விபரம்

வடக்கு .. ரிசர்வே பாரஸ்ட்
தெற்கு .. வெள்ளையனம்பலம் புஞ்சை
கிழக்கு .. வெள்ளையனம்பலம் புஞ்சை
மேற்கு .. பிச்சையனம்பலம் புஞ்சை

இதற்குள்பட்டது. இதுவும்,

6) திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டம், நத்தம் சப்டி, அயன் புன்னப்பட்டி கிராமப் புறவில் பட்டா எண்: 1611 ல் கட்டுப்பட்ட ரீசர்வே 77/2F நிர் புஞ்சை H.A.0.44.5 க்கு ஏக்கர் 1 செண்ட் 10 க்கு நான்குமால் அளவு விபரம்

வடக்கு .. ரிசர்வே பாரஸ்ட்
தெற்கு .. வெள்ளையனம்பலம் புஞ்சை
கிழக்கு .. ஓடை
மேற்கு .. வெள்ளையனம்பலம் புஞ்சை

இதற்குள்பட்டது. இதுவும்,

7) திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டம், நத்தம் சப்டி, அயன் புன்னப்பட்டி கிராமப் புறவில் பட்டா எண்: 1611 ல் கட்டுப்பட்ட ரீசர்வே 77/3B நிர் புஞ்சை H.A.0.09.5 க்கு செண்ட் 23 க்கு நான்குமால் அளவு விபரம்

வடக்கு .. பிச்சையனம்பலம் புஞ்சை
தெற்கு .. வெள்ளையனம்பலம் புஞ்சை
கிழக்கு .. செல்லப்பா வகை புஞ்சை
மேற்கு .. பிச்சையனம்பலம் புஞ்சை

இதற்குள்பட்டது. இதுவும்,

1 முதல் 5 பிரதிவாதிகளால் 2 முதல் 7 அயிட்டச் சொத்துக்களை பொறுத்து 7 ம் பிரதிவாதிக்கு 10.03.2017 ம் தேதியில் எழுதிக்கொடுக்கப்பட்ட கிரைய ஆவண எண். 390/2017( Null and Void ) என்று விளம்புகை செய்ய வேண்டியது.

2023 ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 23 ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

V UDAYASURIYA
Digitally signed by V UDAYASURIYA
Date: 2023.08.23 01:07:55 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**நத்தம்.**